பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

Registered at the G. P. O. as a Newspaper விலை சதம் 20

# ஈழநாடு

EELA NADU

வார மலர்

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 இதழ் 324

பராபவ மார்கழி 19 றமழான் 21 (3-1-67) செவ்வாய்க்கிழமை



மில்க் வைற்
நீல சோப்
50 மேல் உறைகளைச்
சேகரித்து எங்கள்
விற்பனை வான்களில்
கொடுத்து ஒரு அழகான
சாக்குப் பையை
இனமாகப் பெறுங்கள்.

வடபகுதியில்

# 6000 ஏக்கர் நிலத்தில் மேலும் விவசாயம்

## இரணமடு விவசாயிகளுக்கு போதிய நீர்வசதி கிடைக்கும்

### வடபகுதி உணவு உற்பத்தி மகாநாட்டில் தீர்மானம்

(நமது நிருபர்) யாழ்ப்பாணம், செவ்வாய்

இம்முறை காலபோகத்துக்கு இரணமடு விவசாயத்திட்டத்தில் உள்ள குடியேற்றக்காரர்களுக்கு போதிய நீர் விநியோகம் செய்வதென நேற்றுக்காலை வடமாகாண அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற வடமாகாண உற்பத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவால் வடமாகாணத்தைச்சேர்ந்த ஆறாயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் பயனடைவார்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், பொதுஜன தொடர்பு அதிகாரி திரு. டபிள்யு. செல்வரத்தினம், காரியாதிகாரிகள், விவசாய உத்தியோகத்தர்கள், மாவட்டக் காணி அதிகாரிகள், உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள், உதவி உணவு விவசாய டைரக்டர் திரு. எஸ். கனகரத்தினம், மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னர் இருந்த முறையின்படி இரணமடுக்குள விவசாயிகளுக்கு நான்கு மாதகால போக விளைச்சலுக்கே அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. இதன் காரணமாக இப்பகுதி விவசாயிகளில் பலர் விவசாயம் செய்யாதுவிட்டதாகவும் மழைநீர் இல்லாமையாலும் இரணமடு விவசாயத் திட்டத்தில் உள்ள 6 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் 3 ஆயிரம் ஏக்கர் நிலம் பாழடைந்துவிட்டது.

நேற்றைய கூட்டத்தின் முடிவின்படி இப்பகுதியிலுள்ள 6 ஆயிரம் ஏக்கர் நில விவசாயிகளும் மூன்று மாதகாலத்துக்கு கொழுமுறை விதைக்கப்படும் "பச்சைப் பெருமாள்" நெல்லை விளைவிக்கலாம். இதற்கான விதை நெல்லை இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் விதைக்கும்படியும் இதற்கான நீர்விநியோகம் தாராளமாக மார்ச் மாதம் 31-ம் திகதி வரை வழங்கப்படுமெனவும் அரசாங்க அதிபர் விவசாயிகளுக்கு அறிவித்துள்ளார்.

நெல்லிலேயிக்காத காலங்களில் இந்நிலங்களில் பயறு, உழுந்து, வெங்காயம், மிளகாய்போன்ற உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான பொறுப்புக்கள் அவ்வப்பகுதி காரியாதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வப்பகுதிவிவசாயக் கமிட்டிகளை காரியாதிகாரிகளே மேற்பார்வை செய்வார்கள். விவசாயம் சம்பந்தமான பிரச்சாரக் கூட்டங்களை அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து ஒவ்வொருகாரியாதிகாரி பிரிவிலும் நடத்த

(12-ம் பக்கம் பார்க்க)

## 'ஒரு கூப்பனுக்கு 3 ருத்தல் மா வழங்குக'

### சுன்னாகம் பட்டினசபை கோரிக்கை

சுன்னாகம், செவ்வாய்

வாரத்துக்கு இலவசமாகக் கொடுக்கப்படும் இரண்டு றாத்தல் அரிசியோடு, வெட்டிய அரிசியை மீண்டும் கொடுக்கக்கூடியதாய் வரும் வரைக்கும் ஒவ்வொரு கூப்பனுக்கும் மூன்று றாத்தல் மாவை கூப்பன் கடைகளிலேயே வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக்கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தை சுன்னாகப் பட்டினசபை நிறைவேற்றியது.

சென்ற 31-ம் திகதி பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற விசேஷகூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேறியது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான மிளகாய், மல்லி முதலியன பதுக்கி வைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் இவற்றை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனரென்றும் இதைத்தடுப்பதற்கான சட்டத்தை இயற்றி மக்களுக்கு நிவாரணமளிக்குமாறும் அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## திராவிட முன்னேற்றக்கழக தேர்தல் அறிக்கை

சென்னை, ஜன. 3

சென்னை திராவிடமுன்னேற்றக்கழகம் தனது தேர்தல் அறிக்கையை இன்று வெளியிட்டது.

ராஜ்ய அரசாங்கங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவைகளின் பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் கட்சி பாடுபடும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜ்ய அரசாங்கங்களின் அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதற்காக அரசியல் திட்டத்தைத் திருத்தும் முயற்சிகளையும் கழகம் மேற்கொள்ளுமென்றும் தென் ராஜ்யங்களுக்கிடையிலான கலாசார தொடர்புகளை மேலும் நெருக்கமாக வைத்துக்கொள்ளவும் கட்சி வாக்குறுதி அளித்துள்ளது.

## சுழிபுரம் பகுதியிலும் மாவுக்குத் தட்டுப்பாடு

சுழிபுரம், செவ்

இப்பகுதியிலுள்ள கூட்டுறவுக்கடைகள் தனிப்பட்ட கடைகள் ஆகியவற்றில் மா பெற்றுக் கொள்ள முடியாமல் பொது மக்கள் கஷ்டம் அடைகின்றனர். தொல்புரம் மத்தியிலுள்ள மக்கள் அப்பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கத்திலோ, அன்றித் தனிப்பட்ட கடைகளிலோ அரை இறாத்தல் மா கூட வாங்க முடியாதிருப்பது பற்றி சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு பலர் முறைப்பாடு செய்துள்ளனர். கூட்டுறவு சமாசத்திடம் பெற்ற மாவை விநியோகம் செய்யாது பல கூட்டுறவுச்சங்கங்கள் பதுக்கி வைத்திருப்பதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மக்கள் உணவுப் பொருட்களை எவ்வித தங்கில்லுமுல்லும் இன்றி சுபமாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி பலர் உணவு அதிகாரிக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

---

## தமிழரசு செயற்குழு இன்று கூடுகிறது

கொழும்பு, செவ்வாய்

தற்பொழுது நிலவும் அரசியல் நிலைமை பற்றி பரிசீலனை செய்வதற்காக இன்று தமிழரசுக்கட்சிச் செயற்குழு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூடவிருக்கிறது.

## தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணி கூட்டம்

வல்வெட்டித்துறை, செவ்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியின் பருத்தித்துறை கிளையின் கூட்டம் சென்றகிழமை டெட்டர் மண்டபத்தில் அதன் தலைவர் திரு. வி. பி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

காலம் சென்ற தமிழ்க் கவிஞர் திரு. மு. செல்லையாவுக்கு அனுதாபம் தெரிவித்து இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. கட்சியினை ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியானதை கொண்டாட வருடாந்த மகாநாடு கட்சிக்கிளை கொண்டாட வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## கள்ளக் கடத்தல் காரர் பாஸ்போர்ட் ரத்துச்செய்யப்படும்

கொழும்பு, திங்கள்

அரசாங்க விதிகளை உதாசீனம் செய்து கள்ளக்கடத்தல்களில் ஈடுபடுவோர்களுடைய பாஸ்போர்ட்டை ரத்துச் செய்யவேண்டுமென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

வெளிநாடுகளுக்கு பிரயாணிகள் செல்லும் தடைகளை அண்மையில் அரசாங்கம் தளர்த்தியதன் காரணமாக பலர் வெளிநாடுகளுக்குச் சென்று பொருட்களை கடத்தலது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலய தரிசனத்துக்கெனச் செல்லும் யாத்திரிகர்களும் இது சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டாரென நிரூபிக்கப்பட்டால் அவர்களின் பாஸ்போர்ட்டும் ரத்துச் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## உருளைக்கிழங்கு இறக்குமதி தடைசெய்யப்படலாம்

கொழும்பு, திங்கள்

உருளைக்கிழங்கு இறக்குமதி செய்வதை அரசாங்கம் தடை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான செலாவணி சகல வியாபாரிகளுக்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும், உருளைக்கிழங்கு இறக்குமதி செய்வதற்கான அனுமதி அரசாங்கத்தினால் இன்னமும் எவருக்கும் வழங்கப்படவில்லையென தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# உபதேர்தல்களில் போட்டியிட யு. என். பி. தயக்கம்

1967-ம் ஆண்டு நம்பிக்கையோடு பிறந்திருக்கிறது. இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரையில் 1966ம் ஆண்டில் வைத்த நம்பிக்கை எதிர்க்கட்சியினருக்கு வீண் போகவில்லை. நடந்துமுடிந்த ஆண்டு கொடுத்த நம்பிக்கை அவர்களுக்கு புத்தாண்டிலும் அபரிமிதமான நம்பிக்கையை ஊட்டியுள்ளது. 1966-ம் ஆண்டில் மூன்று தொகுதிகளில் நடைபெற்ற உபதேர்தல்களிலும் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே வெற்றியீட்டியது. இதற்கு வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், அந்த மூன்று உபதேர்தல்களிலும் அரசாங்கக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்திருப்பதை அறியமுடிந்தது என்று கூறினாலும் பார்லிமெண்டில் உள்ள ஸ்தானங்களைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிக்கு வெற்றி வெற்றிதான்.


1967-ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே உபதேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. தொடங்கஸ்லந்தை உபதேர்தல் இம்மாதம் 15-ந் திகதியும், வெலிமடை உபதேர்தல் அடுத்த மாதம் 11-ந் திகதியும் நடைபெறவிருக்கின்றன. வெலிமடைத் தொகுதி உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 31-ந் திகதி ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

தொடங்கஸ்லந்தைத் தொகுதியில் யு. என். பி.யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன. தொடங்கஸ்லந்தை முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையின் தொகுதி. 1956-ம் ஆண்டில் தமது அரசாங்கத்துக்குக் கிடைத்த படுதோல்வியின் பின் இலங்கையில் ஆறுமாதமும் இங்கிலாந்தில் ஆறுமாதமுமாக வாசம் செய்யும் சேர் ஜோன் கொத்தலாவலை தொடங்கஸ்லந்தைத் தொகுதியைக் கைவிட்டுச் சென்றார். எனினும் தமக்குப் பின் பொருத்தமான ஒருவரிடமே தொகுதியை ஒப்படைத்ததாக சேர் ஜோன் அச்சமயம் பெருமைப்பட்டுக்கொண்டார். ஆனால் சேர். ஜோனுக்குப் பின் தொடங்கஸ்லந்தை மக்கள் தெரிவு செய்து அனுப்பிவைத்த யு. என். பி. அபேட்சகர் ஏ. யு. ரொமானிஸ் மக்களின் நீண்டகால நம்பிக்கைக்குப் பாத்திரராக இருக்கவில்லை. அவரது குடும்ப விவகாரங்களும், 'விவாகரத்து வழக்கு'ம் அவரது தோல்விக்கு ஒரு காரணமாகவும் இருந்தது. எப்படியோ பல வருடங்களாக யு. என். பி.யின் அசைக்க முடியாத தொகுதியாக விளங்கிய தொடங்கஸ்லந்தை சென்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அடைந்தது. தேர்தல் ஆட்சேப வழக்கில் தேர்தல் செல்லுபடியாகாததாகி விட்டது. இம்மாதம் 15-ந் திகதி உபதேர்தல் நடைபெறுகிறது. யு. என். பி.யும் தனது அபேட்சகரை நிறுத்தியிருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தையும் இழந்துவிடக் கூடாது என்றும் யு. என். பி.யின் கோட்டையாக விளங்கிய தொடங்கஸ்லந்தையைச் சுதந்திரக் கட்சிக் கோட்டையாக்கிவிட வேண்டுமென்றும் முனைந்துள்ளது. தொடங்கஸ்லந்தை உபதேர்தல் பிரசாரத்தை பிரதமர் ஆரம்பித்துவைத்துவிட்டார்.

வெலிமடைத் தொகுதி உபதேர்தலில் யு. என். பி. போட்டியிடவில்லை. அரசியலில் தீவிரமாகக் கலந்துகொண்டதற்காக ஆசிரியர்கள் மீது கல்வி அமைச்சர் எடுத்த 'கடும் நடவடிக்கை' காரணமாக சில ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அப்படி வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் ஒருவரான புஞ்சி பண்டா இரத்நாயக்காவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது அபேட்சகராக வெலிமடையில் நிறுத்தியிருக்கிறது. பிரதமரின் சொல்லையும் மீறி ஆசிரியர்கள் மீது எடுத்த நடவடிக்கைகளின் விளைவை இப்போதுதான் உணர்ந்துகொண்ட கல்வி அமைச்சர் இரியகொல்ல, வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு 'மன்னிப்பு அளித்து'' மீண்டும் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார். வெலிமடைத் தொகுதியில் சென்ற தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற பேர்ஸி சமரவீர மீண்டும் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். பார்லிமெண்டுக்கு வந்ததும் அவர் யு. என். பி.யை ஆதரித்து வந்ததால் அவரை இத்தேர்தலில் யு. என். பி. ஆதரிக்கிறது. 1958-ம் ஆண்டு நடைபெற்ற தார் பூச்சு இயக்கத்தில் கே. எம். பி. ராஜரத்தினாவையும் ஒருபடி மிஞ்சி சிறைசென்றவர். அதன்பின்வந்த தேர்தல் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டு இவரது தேர்தல் செல்லுபடியாகாதென அளிக்கப்பட்ட தீர்ப்பு. தேர்தல் ஆட்சேபனையில் அடுத்த அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்த திரு. கே. எம். பி. ராஜரத்தினா தெரிவுசெய்யப்பட்டதாகத் தீர்ப்பளிக்கும்படி [கோரப்பட்டிருந்தால் இப்பொழுது இந்த உபதேர்தல் நடைபெற வேண்டிய அவசியமேற்பட்டிருக்காது. இம்முறையும் திரு பேர்ஸிசமரவீர தெரிவு செய்யப்பட்டால் தேர்தல் ஆட்சேபனை தாக்கல் செய்யப்படவாய்ப்புண்டு. இதற்கிடையில் கவர்னர் ஜெனரல் அவருக்கு மன்னிப்பு அளிக்காமல் சிறைசென்றதால் பார்லிமெண்டில் அங்கம் வகிப்பதற்கு தடையாக இருக்கும் குறிப்பிட்ட காலத்தை [தேர்தலுக்கு முன் நீக்கி] விடலாம்.

திரு. கே. எம். பி. ராஜரத்தினா மீண்டும் கட்சித் தலைவராக இருக்கிறார். அந்தப்பதவியை உதறித்தள்ளிவிட்டு தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் அவர் போட்டியிட விரும்பவில்லை.. சென்ற தேர்தலில் அவரது வகுப்புவாதத்துக்குக் கிடைத்த 'அடி, அந்தத் தேர்தலின் பின் அவர் தமது போக்கில் ஏற்படுத்திக்கொண்ட மாற்றம் அல்லது தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழ் மொழிச் சட்ட விதிகள் காரணமாகவிருந்த கட்சிக்குச்சென்றும் அரசாங்கத்தை ஆதரித்து வரும் அவரது மனோநிலை அரசியல் நடவடிக்கை ஆகிய பல விஷயங்கள் ராஜரத்தினா போட்டியிடாததற்குக் காரணமாக இருக்கலாம்.

(12 ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி கென்னடியை "தேனே" என்று ஜோன்ஸன் அழைத்தாரா?

## வெளிவராத புத்தகம் அமெரிக்காவை கலக்குகிறது

'தேனே, மானே' "கண்ணே, மணியே" என்றெல்லாம் பெண்களை ஆண்கள் வருணித்து மயக்குவதாகப் பொதுவாக ஆண்கள் மீது பெண்கள் குற்றம் சுமத்துவதுண்டு.

ஒரு ஜனாதிபதியின் மீதும் இக்குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறதாம். ஆனால் அந்த ஜனாதிபதி மறுத்திருக்கின்றார்.

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியான திருமதி ஜாக்குலின் கென்னடியை, இன்றைய அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் ஜோன்ஸன் "தேனே" என்று அழைத்தாராம். அதுவும் திரு. கென்னடி சுட்டுக் கொலைசெய்யப்பட்ட சில மணிநேரத்தில், என்ன செய்வது என்று அறியாது எல்லோரும் திகைப்பிலாழ்ந்திருந்த அந்த நேரத்தில் திருமதி ஜாக்குலின் கென்னடியைப் பார்த்து "தேனே" என்று திரு. ஜோன்ஸன் அழைத்தாராம். இந்த 'அழைப்பை'க் கேட்டு திருமதி கென்னடி அதிர்ச்சி அடைந்தாராம்.

இதுபற்றி திரு. ஜோன்ஸன் இப்பொழுது விளக்கம் கூறியிருக்கிறார். "தேனே" என்று அழைத்திருக்கக் கூடுமென்றும், அப்படி அழைத்திருந்தால் 'டெக்ஸாஸ்' (திரு. ஜோன்ஸனின் பிறந்த ஊர்) பகுதியில் சர்வசாதாரணமாக உபயோகிக்கப்படும் இந்த வார்த்தை தனது வாயிலும் இயல்பாகவே வந்திருக்கக் கூடுமென்றும் ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

இந்தப் பிரச்சினை மட்டுமல்ல. இதைவிடப் பெரிய பிரச்சினைகளை இன்னும் வெளிவராத ஒரு புத்தகம் அமெரிக்காவில் உருவாக்கியிருக்கிறது. "ஒரு ஜனாதிபதியின் மரணம்" என்று பெயரிடப்பட்டுள்ள இப்புத்தகம் இன்னும் வெளிவரவில்லை. ஆனால் அது கிளப்பியிருக்கும் பிரச்னைகள் பல புத்தகங்களாக வெளியிடக்கூடிய அளவுக்கு வளர்ந்துள்ளன.

### உலக மேடை

எஸ். எம். ஜி.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக மிகக் குறுகிய காலத்துக்கே பதவிவகித்தாலும் உலகில் பெரும் பெயரையும், புகழையும் சம்பாதித்துக்கொண்டு, ஒரு கொலைகாரனின் (கொலை செய்தது ஒருவர்தானா என்பதே இப்போது சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது) துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான திரு. ஜோன் எப். கென்னடியின் மரணம் பற்றி மாஞ்செஸ்டர் என்னும் பிரபல எழுத்தாளர் ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். கென்னடி குடும்பத்தின், அதாவது திருமதி ஜாக்குலின் கென்னடியினதும், திரு. ரொபர்ட் கென்னடி (காலஞ்சென்ற ஜனாதிபதி கென்னடியின் சகோதரர்) யினதும் சம்மதத்துடன் மட்டுமல்ல அவர்களின் விருப்பப்படிதான் அவர் இதை எழுதினார்.

மூன்று லட்சம் வார்த்தைகள் கொண்ட இந்தப் புத்தகத்தை எழுதுவதற்காகத் தினசரி 16 மணிநேரம் மாஞ்செஸ்டர், கென்னடியுடன் சம்பந்தப்பட்டவர்களையும், கென்னடி கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசுவதிலும், பேட்டி காண்பதிலும் செலவிட்டிருக்கிறார். 1964ம் ஆண்டு மார்ச் மாதம் 26ந் திகதி இந்தப் புத்தகத்தை எழுதுவதற்காக் கென்னடி குடும்பத்துடன் ஒப்பந்தமொன்றில் மாஞ்செஸ்டர் கைச்சாத்திட்டார். 64ம் ஆண்டு முடியும் வரை ஆட்களைப் பேட்டி காண்பதிலும், சம்பாஷணைகளை ஒலிப்பதிவுசெய்வதிலும் அவர் செலவிட்டார். அவர் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருந்தவர்களில் மூவரைத் தான் அவர் சந்திக்கமுடியாது போனதாம். ஒருவர், கென்னடியைச் சுட்டுக் கொலைசெய்ததாகக் கூறப்படும் லீ ஒஸ்வால்ட்டின் தாயாரான மரினா ஒஸ்வால்ட். மாஞ்செஸ்டரைச் சந்திக்க மரினா மறுத்துவிட்டார். மற்றவர் ஐ நா.வில் அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதியாக இருந்தவரும், முன்பு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவருமான திரு. அட்லாய் ஸ்டீவன்சன். மாஞ்செஸ்டர் சந்திப்பதற்குத் திகதி குறிப்பிட்டிருந்தாரெனினும் அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர்தான் ஸ்டீவன்சன் லண்டனில் காலமானார். அடுத்தது ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன். முதலில் மாஞ்செஸ்டருக்குப் பேட்டியளிக்க ஜோன்ஸன் ஒப்புக் கொண்டிருந்தார். பின்னர் ஒத்திவைத்தார். மீண்டும் ஒப்புக்கொண்டார். முடிவில் சில கேள்விகளுக்கு எழுத்துமூலம் பதிலளித்தார்.

டைப் அடிக்கப்பட்ட ஆயிரம் முழு 'புலிஸ்காப்' கடதாசிகளைக் கொண்ட இந்தப் புத்தகத்தை எழுதி முடிப்பதற்குள் கடும்உழைப்புக் காரணமாக மாஞ்செஸ்டர் நோய்வாய்ப்பட்டு ஒரு தடவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையும் பெற்றார்.

இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு ஒப்புக்கொண்டதும் திருமதி கென்னடியை மாஞ்செஸ்டர் இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஒருதடவை அவர்கள் சந்திப்பு பத்து மணிநேரம் நீடித்தது. மாஞ்செஸ்டரின் கேள்விகளால் உணர்ச்சிவசப்பட்ட திருமதி ஜாக்குலின் கென்னடி ஒளிவுமறைவின்றி திரு. ஜோன் எப். கென்னடியுடன் தாம் நடத்திய வாழ்க்கை, நிகழ்ந்த சம்பவங்கள் அத்தனையையும் அவர் சொல்லிவிட்டாராம். இது மாஞ்செஸ்டரின் ஒலிப்பதிவுக்கருவியில் பதிவாகியுள்ளது.

மாஞ்செஸ்டருடன்செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி, திருமதி கென்னடி விரும்பினாலொழிய திரு. கென்னடி இறந்த தினத்திலிருந்து ஐந்துவருடங்களின் பின்னரே இந்தப் புத்தகம் வெளியிடப்பட வேண்டுமாம்.

ஆனால் புத்தகத்தை மாஞ்செஸ்டர் சரியாக எழுதமுன்னரே, அவரது கையெழுத்துப்பிரதியைச் சிலர் பார்த்ததால் அதன் சிலபகுதிகள் பற்றி வெளியில் பேச்சடிபடத் தொடங்கியது. இந்தப் புத்தகம் இப்பொழுது வெளிவந்தால் இப்போதைய ஜனாதிபதி லிண்டன் ஜோன்சனுக்கும் கென்னடி குடும்பத்துக்கும் தகராறு ஏற்படக்கூடுமென்றும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் திரு. ரொபர்ட் கென்னடி 'வெள்ளைமாளிகையில்' பிரவேசிக்கும்வாய்ப்பைக் கெடுத்து விடக்கூடுமென்றும் கருத்து நிலவியது. ஆனால் நாள் செல்லச்செல்ல சிறிது சிறிதாக மாஞ்செஸ்டரின் புத்தகத்தில் 'இப்படி எழுதப்பட்டிருக்கிறது அப்படிஎழுதப்பட்டிருக்கிறது'' என வதந்திகள் வெளிவந்தன. மாஞ்செஸ்டரின் புத்தகப் பிரதியை கென்னடி குடும்பத்தினர் பார்த்து அங்கீகரிக்கவேண்டுமென்பதும் ஒப்பந்தத்தில் ஓர் அம்சம். ஆயினும் திருமதி கென்னடி அதைப்பார்க்கவில்லை. திரு. ரொபர்ட் கென்னடியின் சார்பில் வேறுசிலர் பார்த்தனராம்.

புத்தகத்திலிருக்கும் சில அம்சங்கள் தாம் தம்மை மறந்த நிலையில், மனமுடைந்த துயர நினைவுகளில் ஆழ்ந்து உணர்ச்சிவசப்பட்டு சொன்னவைகள் என்றும் தமது அந்தரங்க உள்ளக்கிடக்கை பற்றிய விஷயங்களையும் மாஞ்செஸ்டர் இப்புத்தகத்தில் பயன்படுத்துவாரெனத் தாம் எதிர்பார்க்கவில்லையென்றும் திருமதி கென்னடி கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் வரலாற்றுநூலாக விளங்கவிருக்கும் ஒரு புத்தகத்தில் சொந்தவாழ்க்கையின் விருப்பு வெறுப்புக்கள் இடம்பெறலாகாது என்று அவர் கருதுகிறாராம்.

மாஞ்செஸ்டரைக்கொண்டு கென்னடி வரலாறு எழுத முனைந்த திருமதி கென்னடிக்கும் வரலாற்றை எழுதிமுடித்த மாஞ்செஸ்டருக்கும் அந்த நூலை வெளியிட உரிமைபெற்ற நூல்வெளியீட்டு ஸ்தாபனத்துக்குமிடையில் ஏற்பட்ட தகராறைச் சமாதானம் செய்யப்பலர் முயன்றனர். அந்த முயற்சிகள் விபரீதமாயின.

ஒரு ஜனாதிபதியின் மரணம் என்ற அந்த நூலை வெளியிடாமல் தடுத்துவைப்பதற்கு திருமதி ஜாக்குலின் கென்னடி நீதிமன்றத்தின் உதவியை நாடியிருக்கிறார். புத்தகத்தை எழுதிய மாஞ்செஸ்டரோ தமது கடும் உழைப்பு வீணாகிவிடுமோ என்றவேதனையில் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

### ஜோன்சன் விளக்கம்

இந்தநூல்பற்றிய சர்ச்சை பற்றி ''நியூஸ்வீக்'' என்ற சஞ்சிகை வெளியிட்ட விபரங்களைத்தொடர்ந்து அந்த சஞ்சிகையின் நிருபருக்கு இன்றைய ஜனாதிபதி விளக்கம் கொடுத்திருக்கிறார். அதில் ஒன்றுதான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'தேனே" பற்றிய விளக்கம்.

திரு கென்னடி, டல்லாஸ் நகரில் கொலைசெய்யப்பட்ட சிறிதுநேரத்தில் ஜனாதிபதி மாளிகை விமானத்தில் (விமானப்படை விமானம் ஒன்று) திருமதிகென்னடி ஏறியபோது அங்கே திரு ஜோன்சன் அமர்ந்திருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்ததாகவும் மாஞ்செஸ்டர் தமது புத்தகத்தில் எழுதியிருந்தாராம். இதை மறுத்து விளக்

(11ம் பக்கம் பார்க்க)

## சென்னை இசைவிழா சிந்தனைகள்

— வீ. என். பீ. —

உலகின் தலைசிறந்த மிருதங்க வித்துவானாகிய பாலக்காடு மணிஐயர் அவ்வாத்தியத்தில் விந்யாசம் செய்யும்போது மிருதங்கச் சொற்கள் மணி மணியாக உதிரும். அவருடைய சுண்டுவிரல் வலத்தலையை மீட்டும்போது சம்மட்டி அடித்தது போலிருக்கும்.

அதுபோலவே, சென்னை மியூஸிக் அகடமியின் 40வது சங்கீத மகாநாட்டின் தலைவராக அவர் பேசியபோதும் சிலமணிமொழிகளும் உதிர்ந்தன. சில சம்மட்டி அடிகளையும் போட்டார்.

சங்கீதம் என்பது எல்லாருக்கும் எளிதில் வராதென்று கூறி பூர்வ ஜன்மத் தொடர்புள்ளவர்களாகத்தான் சிறந்த வித்வான்களாய் வர முடியுமென்று அவர் சொன்னபோது, அடித்துப்போட்டாலும் ஸ, ப, ஸ சரியாகச் சொல்லத்தெரியாத இளம் பிள்ளைகளுக்கு அவர்களது பெற்றோர்கள் வருடக்கணக்காக வாத்தியார் வைத்துச் சங்கீதம் சொல்லிக்கொடுப்பது என் நினைவுக்கு வந்தது. அப்படிவரப்பிரசாதம் பெற்றவர்களும் கூட குறைந்தது பத்துவருடங்கள் நல்ல குருவிடம் சிக்ஷை பெறவேண்டும் என்றும் அதற்குப்பின் குறைந்தது ஐந்துவருடங்களாவது சிறந்த வித்வான்களைக் கேட்கவேண்டுமென்றும் ஸ்ரீ மணி ஐயர் புத்திமதி கூறினார்.

43 வருடங்களாக மிருதங்கம் வாசித்துவரும் மணி ஐயர் எத்தனை ஆயிரம் கச்சேரிகளில் பங்குபற்றி எத்தனை ஆயிரம் வித்வான்களின் மணிக்கணக்காக ராக ஆலாபனை செய்வதைப் பொறுமையுடன்கேட்டுச்சகித்து உத்தமித்தவர் என்பதையும் தமது பேச்சில் வெட்டவெளிச்சமாகக் கூறிவிட்டார்.

ராக ஆலாபனை பத்து நிமிடங்களுக்கு மேல் நீடிக்கப்படாதென்கிறார். எத்தனை உண்மையான பேச்சு!

பலருடைய அனுபவத்தாலும், கடும் உழைப்பாலும், கற்பனையாலும் ஒரு ராகத்தின் ஜீவ களையைத்திரட்டி அதன் சாரத்தைப் பிழிந்தெடுத்து வழங்குவதுதான் ராக ஆலாபனை. அநாவசியமாக ராகத்தின் விவரங்களை அனாரக்கோர்வை செய்வதும் கேட்போர் அலுத்துக் களைக்கும்வரை சங்கதிகளை திருப்பித் திருப்பிப் பாடுவதும் பாடகரின் புகழைக் குறைத்துக்கொள்வதற்கு ஒரு குறுக்கு வழி.

இன்னொரு மணி மொழி. சங்கதிகளும் பிர்க்காக்களும் வாய்ப்பாட்டுக்கு வேறு, வாத்தியங்களுக்கு வேறு. சில சங்கதிகள் வாத்தியங்களுக்கே உரியன. அவற்றை வாய்ப்பாட்டில் உபயோகிக்கப் படாது. கற்பனை செய்கிறோம் என்று நினைத்துக் கொண்டு ஒரு கீர்த்தனையின் அடிப்படையான அமைப்புக்குப் பங்கம் உண்டு பண்ணும் வகையில் அநாவசியமான சங்கதிகளைப் புகுத்தப்படாது.

இந்த உண்மை இக்காலத்து இளம் கலைஞர் பலருக்கு வெளிச்சமாகாது. ஒரு கீர்த்தனைக்கு சம்பிரதாய வழக்கிலுள்ள சங்கதிகளுக்கும் மேலதிகமாக, தமது கற்பனைத் திறனை வெளிப்படுத்துவதாக [illegible] கொண்டு, தங்கள் சொந்த சிருஷ்டிகளையும் இணைத்து [illegible] கொட்டுவது பொதுவாக ரசிகர்களுக்கு அலுப்பையூட்டும்.

'தின்னு வினு' என்ற தியாகராஜ கீர்த்தனத்துக்கு டி. ஆர். மகாலிங்கம் புல்லாங்குழலில் பிடித்த பிடிகளை வாய்ப்பாட்டில் பிடிக்கப்போனால் அனர்த்தம் விளையும். 'சேதுலார' என்ற கீர்த்தனையில் வரும் சங்கதிகளை நாதஸ்வரக்காரர் பிடிக்கும்போதுதான் இன்பம் பெருகும். பாட்டுக்காரர் அந்த சங்கதிகள் எல்லாவற்றையும் பிடித்துப் பாடினாரென்றால் அதில் அற்புதம் இருக்கலாம், ஆனந்தம் இருக்காது.

### 'இசைப்பேரறிஞர்'

தமிழிசைச் சங்கத்தின் 24-வது சங்கீத மகாநாட்டுக்கு தலைமை தாங்கிய ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளுக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டத்தை சென்னை உணவுமந்திரி ஸ்ரீ வி. ராமையா வழங்கினார். நாடக உலகில் வளர்ந்து இசையுலகில் பிரவேசித்து வெகு சீக்கிரத்தில் முன்னணிப்பாடகியாகவந்துவிட்ட கே. பி. எஸ்ஸுக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டது சாலவும் பொருத்தமானது. மன நிம்மதி பெறுவதற்கு இசையே சிறந்த மார்க்கம் என்று சுந்தராம்பாள் தமது தலைமையுரையில் கூறியது சொந்த அனுபவத்தின் பயனாகவே இருக்கவேண்டும். கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களாகக் கலைத்தொண்டு புரிந்துவரும் 'இசைப்பேரறி[illegible] [illegible] ரசிகர் எல்லோரையும் மகிழ்விப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

# தத்துவங்கள்

மேசையீது கடதாசிகள் பரப்பிக் கிடக்கின்றன.

பக்கத்திலுள்ள அலுமாரியில் மறைத் தமிழ்ப் பேரகராதி, நாலடியார் பாடல், மணிவாசகரின் திருவாசகம், கம்பராமாயணம் போன்ற பழமையும் சிறப்பும் கொண்ட புத்தகங்கள்...... நிரம்பிக் கிடக்கின்றன.

சூழல் யாவும் வெற்றுக் கடதாசிகள்......

ஒரு பக்கத்திலே தொழிலாளர்களின் இரண்டொருவர் பத்திரிகைகளை வெட்டிக்கொள்ள, வேறு சிலர் புத்தகங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். உள்ளே பணிமேசைகள் அச்சு இயந்திரங்கள் இயங்கத் தொடங்கிவிட்டன....

தொழிலகம் களைகட்டி பெருமூச்சுகளுக்கூடே இயங்கும் அந்தவேளை...

இன்னும் மேசையின்மீது பரட்டியபடியே கிடக்கும் கடதாசிகளை நான் தொடவில்லை.

கிழக்குப்பக்கத்தே அமைந்த வெளியினூடே பாய்ந்து வரும் சூரியரசமியின் ஜன்னல்இடுக்கு வழியாகப்பாய்ந்து என்முதுகைக் கிழிக்க முற்பட்டுள்ளன. அப்போதும் எந்தவிதமான உறைப்பும் எனக்கில்லை.

நான் என்ன செய்வது? வாழ்க்கைக்காக மனிதன் வெறுமனே ஓரே மேடுபள்ளமற்ற மைதானத்தில் ஓடிக்கொண்டிருப்பதா? அல்லது ஒக்கிப்பாயும் அலைகளுக்கெதிரே சதா எதிர் நீச்சலடிப்பதா? எதுவுமே... இப்போதைக்குப் பிடித்த மற்றது.

தானே நாடகமாகி ஒத்திகை பார்க்கமுற்படுகிறேன்.

மனிதன் உலகத்தில் பிறக்கிறான். உலகத்தில் வாழ்கின்றான் இந்த உலகம் அவனை ஒருநாள் அனுப்பிவிடுகிறது. அதற்குப்பிறகு அவன் என்ன

— இ. நாகராஜன் —

ஆகிறான்? இப்படியொரு கேள்வியை எழுப்புகிறேன்.

எவருமே இதற்குப் பதிலளிக்கமுடியாது. எனவே நானும் இந்தத் தத்துவத்தைப்பற்றி அதிகம் அக்கறைப்படுத்தவில்லை.

''மனிதன் பிறக்கிறான். இறக்கிறான். பிறந்து இறந்த பின்னும் அவன் இருக்கவேண்டும்.''

இப்படியொரு அறிஞன் ஒரிடத்தில் சொல்லியிருக்கிறான்:

''உலகத்தைப் புரிந்துகொண்டு, உலகத்துக்காக வாழ்வது மட்டுமல்ல. தனக்காகவும் ஒருவன் வாழவேண்டும்.''

இப்படியான தத்துவங்களின் நெஞ்சில் அலைமோத நான் செய்யவேண்டிய கடமையை மறந்து அப்படியே சற்று கதிரையில் சாய்ந்தபடியிருக்கிறேன்.

எனக்கென்ற தனியான ஒரு எண்ணக் கூட்டத்தை நானே வகுத்து, அதற்குள் நின்று கடந்த - நிகழ்கால நிகழ்ச்சிகளை சிறுகச் சிறுக இருன் அந்தத் தத்துவத்தின் உடபொருளை ஒட்டிச்செல்லும் வாழ்க்கை வெறும் புகழ் என்ற பொய்க்கால் குதிரையா? அந்த அறிஞனின் கூற்றிலும் ஐயம் எனக்கு.

சே! எவ்வளவு நினைவுகள்.

நினைவுகள்தான் மனிதனை என்றும் விடாமல் பற்றிக்கொள்ளுமே. தரமனிதன் அவற்றைவிட்டு எப்பவுமே தப்பித்துக்கொள்ள முடியாது.

ஃ ஃ ஃ

காரியாலயத்தில்வேலைகள் ஆரம்பமாகி முழுமூச்சுடன் இயங்கத் தொடங்கியபின்பு இப்படி வக்காக நான் மட்டும் காலத்தை விரயஞ்செய்வது சுயநலமல்லவா?

சுயநலமில்லாத மனிதனை இந்த உலகத்தில் எவன் இருக்கிறான்? உலகத்தைப் பார்க்கும்போது எவனும் சுயநலவாதிதான் என்பதை அப்படியே அறிந்துகொள்கின்றோம்.

அந்த மனிதக் கூட்டத்தைச்சேர்ந்தவன் தானே நானும் எனக்கென்று தனிப்பலன் ஒன்று இருக்கத்தான் வேண்டுமா? இந்த எண்ணச் சுழலால் நான் உதாசீனம் செய்வது என் கடமையல்லவா.. இது சரியில்லை- மனம் நீதியதியாகிவிடுகிறது.

கடமையைக்கட்டிப்பிடித்துக்கொண்டு அப்படியே இருந்திருந்து கண்டபலன் தான் என்ன?

வாழ்வென்பது வெறும் வயிற்றுக்காக மட்டுமல்ல, வயிற்றுக்குமேலால், மனித சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் கட்டிக்காத்துக் கொண்டுவரும் மானம் என்ற ஒன்று இல்லையென்றால் வாழ்வு என்னவது?

இத்தகைய சிந்தனையே என் மனச்சாலைத்துக்குப் பொறுக்கைகளாக அமைந்தன.

''என்ன இன்னும் 'புறாவ்' பார்க்கவில்லையா?''

இந்தக் கேள்வியுடன் அச்சகத்து 'போமன்' என்முன் நிற்கிறார். அதுவரை என்னைத் தன் வசப்படுத்திய சிந்தனைப்பறவை பறந்துவிட, நிஜ உலகத்துக்கே வந்துவிடுகிறேன்..

''என்ன?''

''எவ்வளவு நேரமாகிவிட்டது. மெஷினுக்குக்கொடுக்கவேண்டும்.''

இப்படிச் சொல்லிக்கொண்ட அவர் என்னை எளியிடுவதுபோல் ஏற இறங்கப் பார்க்கிறார். அதைவிட்டு நகரும் பாடாகவில்லை.

எதைச்சொல்லி அவரைக் கடத்துவது.

''சரி இன்னும் சிறிது நேரத்தில் தந்துவிடுகின்றேன். நீங்கள் போங்கோ.''

இப்படிச் சொல்லிக்கொண்டாலும் சொன்னபடி நடக்க இப்போதைக்கு என்மனம் இடந்தரவில்லை.

ஃ ஃ ஃ

கடந்த இரண்டு நாட்களுக்கு முன், நிகழ்ந்தவை மனக்கடலைக் கடையத் தொடங்குகின்றன. அதில்

(8-ம் பக்கம் பார்க்க)

உருவகக் கதை

## ஞானம்

ஆனிமாதத்துடன் தொடங்கி, புரட்டாதி மாதம் பூர்த்தியாகும் வரையில் இடைக்கிடையே உரத்து வீசிக்கொண்டிருக்கும் அந்த அதே சோழகக் காற்று, தனது குரூரசுபாவங்களை வழமைபோல வீசுகிறது.

அகண்ட வெளியில், தனித்து நிற்கும் ஒற்றைப்பனையும் காற்றில் சுழன்று சுழன்று ஆடுகிறது. பனையைவிட அதன் வட்டில் வாழ்க்கையின் எல்லைக்கே சென்றிட்ட காவோலையொன்றுதன்னுயிரைக் கையில் பிடித்தவாறு பரிதாபமாகச் சுழன்று, சோரை இழந்து ஆடி இழைத்தது.

எப்பொழுதாவது, தனக்கு வரப்போகும் ஆபத்தை அறிந்திருந்ததால் தன் கீழே மேலும்குனிவிட்டிருந்தது நெஞ்சு. இக்கின்ற ஏக்கவொலி ஒலித்துக் கொண்டது காவோலைக்கு.

''ஹி.. ஹீ. ஹி. ஏய்கிழவி, நன்றாய் ஆடுகிறாய். உந்த நாட்டியத்தை எங்கு தான் கற்றுக் கொண்டாயோ?'' பனைவட்டின் நட்ட நடுமத்தியில் பலதத பாதுகாப்பினூடே இருக்கும் இளம்குருத்துத் தான் இப்படிக் கேட்டது.

காவோலையின் வயிற்றில், நெருப்பைக் கொட்டியதுபோலிருந்தது தன்பரம்பரையில், வந்த இந்தச் சிறு பிள்ளை கேலி செய்கிறதே என்பதை நினைக்கும்போது. வீசுகிற காற்று கொஞ்சம் உரக்க வீசித் தன்னுயிரை அக்கணமே பிரித்து விட்டாலென்ன என்ற எண்ணமும், அதற்குக் கூடவே தோன்றிற்று. இருப்பினும்சிறு பிள்ளை தானே என்ற பரிவுணர்ச்சியால் அதற்கு சின்ன கதை சொல்லமுற்பட்டது காவோலை.

''எடி...புள்ள நீ இன்னுஞ் சிறிசு...சிறுபிள்ளை மயப்பிராயத்தின்ம்...அது போல உனக்குஇப்போஎன்ன தெரியப் போகுது...அதனுல் உப்படிக் கேட்கிறாய்... நீயும் ஒருநாளைக்கு இப்படித்தான்...'' காவோலைசொல்லி முடிப்பதற்குள், சுழற்றி அடித்த அந்தக் காற்றின் தனது சிறு பிடியையும் தளர விட்டுத் தடுமாறியது.

''ஹி... ஹீ... ஹி ...ஏய் கிழவி, நீயேன் சாகப்போகிற நேரத்தில் வேதாந்தம் பேசிக்கொண்டு நர்த்தனம் புரிகிறாய்..?'' எனவியதுடன் பெரிய எக்காளச் சிரிப்பொன்றையும் கூடவே உதிர்த்தது, குருத்தோலை. அதற்குள் காவ, பிடி தளர்ந்து நிலத்தில் விழுந்து உயிரை விட்டது காவோலை.

காலச்சக்கரம் சுழன்று கொண்டுதான் இருந்தது. அன்று குருத்து ஓலையாகஇருந்தது இன்று காவோலை, இத்தவருடமும், ஆனிமாதச் சோழகக்காற்று ஆரம்பமாகி வீசுகிறது. அன்றைய குருத்தோலை அன்றைய காவோலையின் நிலையில்..

ஹி— ஹீ.. ஹி...என்ன கிழவி எப்படியிருக்கிறது உடம்பு..?' இன்றைய, குருத்தோலை ஒன்று தான் கேட்கிறது.

—பட்டணைந்து

சோவியத் சிறுகதை

# இளைஞன் கனவு

வீட்டுக்குவரும் விருந்தாளிகள் அந்தக் குழந்தையிடம் இந்தக் கேள்வியைக் கேட்பார்கள்.

''குழந்தாய்! பெரியவன் ஆனதும் எந்த வேலைக்குப் போவாய்?''

''நான் பெரியவன் ஆனதும் கோமாளியாகவும், மாலுமியாகவும், ஊர்க்காவல் வீரனாகவும், கடைசியில் சாகும்வரை வாயில் காப்போனாகவும் இருப்பேன்!''

''வாயில்காப்போன்வேலை எதற்கு?''

''அது மிகச் சுவையான வேலை ஏனெனில் அவன் அதிகாலையிலேயே எழுந்திருக்கிறான்; தெருக் கூட்டும் பொழுது, சிறிய சக்கரங்களையும், பொத்தான்களையும், கழிகளையும் கண்டெடுக்கிறான். இல்லாவிடில் அவற்றை நாம் பார்க்கவே முடியாது!''

குழந்தை இவ்வாறு பேசும்போது, முதன் முதலில் பெற்றோர்களுக்கு மிக இனிப்பாக இருந்தது; அவர்கள் புன்னகை சிந்தினார்கள். ஆனால் அவன் பெரியவன் ஆனதும் அவர்களின் அச்சம் அதிகமாயிற்று. ஏனெனில் அவன் 'வாயில் காப்போன் இலட்சிய''த்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டான்! பெற்றோர்களுக்கு எரிச்சல் மூண்டது; அவனிடம் கோபித்துக்கொண்டார்கள்.

அவன் கோமாளியாவதை அவர்கள் எதிர்க்கவில்லை. ஏனெனில், நிறையச் சம்பாதிக்கும் கண்ணியமான, புத்திசாலித்தனமான கோமாளிகள் இருக்கிறார்கள்.

அவன் ஊர்க்காவல் வீரனாவதையும் அவர்கள் எதிர்க்கவில்லை; அதாவது வாய் திறந்து திட்டவில்லை! மாலுமி வேலையையும் அவர்கள் எதிர்க்கவில்லை. ஏனெனில் அ[illegible] எனவே அவனை மாலுமியாக முடியாது!

ஆனால், அவர்கள் வாயில் காப்போன் வேலையைக் கண்டிப்பாக எதிர்த்தார்கள்.

''எங்கள் குடும்பத்தில் பியானோ வாசிக்கும் வேலைக்குக் கீழே, வேறு எதையும் பார்த்ததில்லை. எங்கள் பையன் ஒரு இசைக் கலைஞனாக விளங்குவான்'' என்று அவர்கள் பெருமை அடித்துக்கொண்டார்கள்.

ஆமாம்; அவன் வாயில் காப்போனாக இல்லாவிடில், இசைக் கலைஞனாக இருந்துவிட்டுப் போகட்டும். எல்லாம் ஒன்றுதானே!

எனவே, அந்தப் பையனின் பெற்றோர்கள், அவனை ஓர் இசைப்பள்ளியில் சேர்த்தார்கள். நுழைவுத் தேர்விலே தேறவேண்டுமானால், அவன் ''காட்டிலுள்ள சின்னஞ்சிறு ஃபர் மரமே!'' என்ற சிறுவர் பாடலைப் பாடவேண்டும். அது கட்டாயபாடம். பின்னர், புக்ஸினி இயற்றிய ''காலன் வந்துவிட்டான்! கண்ணை மூடுகிறேன்'' என்ற பாடலைப் பாடவேண்டும். அது இஷ்டபாடம்.

பெலிக்ஸ்காமோவ்

இரு வாரத்திற்குப் பிறகு, தேர்வுக் குழுவினரைச் சந்தித்தாள் அவன் அம்மா. அவர்களது முடிவை மாற்றும்படி வேண்டிக்கொண்டாள். ''காலன் வந்துவிட்டான்; கண்ணைமூடுகிறேன்'' என்று அவன் பாடிய ''அழகை'' அவர்கள் அதற்குள் எப்படி மறக்கமுடியும்?

எனவே, பெற்றோர்கள் அவனுக்கு வீட்டிலேயே சங்கீதம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள்! ஆனால் [illegible] டார்கள்; ஏனெனில் மிகச் சிறந்த சங்கீத ஆசிரியர்கள் எல்லாம் தகுந்த இடங்களில் அமர்ந்துவிட்டார்கள். சரி; மோசமான ஆசிரியர் என்று ஒருவர் உண்டா? அப்படி எவரும் இல்லை!

அந்தப் பையனின் பெற்றோர்கள் கடைசியில் ஒரு பெண்மணியைக் கண்டுபிடித்தார்கள். அந்த அம்மாளுக்கு யாழ் மீட்டத் தெரியுமாம்.

''நாம் முதலில் இசைத் தத்துவத்திலிருந்து தொடங்கலாம். நானும் உங்கள் மகனும், பாடப் புத்தகங்களை, ஒரு இரண்டாண்டுக் காலம் வாசித்துக்கொண்டிருப்போம்; அதற்கிடையில் நீங்கள் பணம் சேமித்து யாழ் வாங்கிவிடலாம்'' என்றுள் அந்த சங்கீத ஆசிரியை.

ஆனால், பெற்றோர்களால் அவ்வளவு காலம் பொறுத்துக்கொள்ளமுடியுமா? யாழ் விலை அதிகமாகையால், அவர்கள் உள்ளூர் அருமனிடம் ஒரு யாழுக்கு ஆடர் கொடுத்தார்கள். ஒரு மாதகாலத்திற்குள் அவன் கோர்ந்து மணம் வீசும் புதிய யாழ் ஒன்றைக் கொண்டு வந்துவிட்டான்!

''இந்த யாழைக் குழந்தை எப்படி வாசிக்கும் எல்லாத் தந்திகளையும் அவன் விரல்கள் எப்படிப்பிடிக்கமுடியாதே?'' என்று வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் கேட்டனர்.

''அவன் வளர்ந்து வரும்போது, எல்லாத்தந்திகளையும் தொட்டுவிடுவான்'' என்றனர், பெற்றோர்கள்.

சங்கீத ஆசிரியை, கருமான் கொண்டுவந்த யாழைப் பார்த்தாள்.

'நான் கற்பனை செய்த யாழ் வேறு! அதுபோல இருந்தால்தான் வாசிப்பேன்' என்று முணுமுணுத்தாள்.

அப்புறம் அட்வான்ஸ் பணத்துடன் அவள் மறைந்துவிட்டாள்,

அந்த யாழை இடைகழியில் வைத்திருந்தார்கள், அங்கு வந்தோரெல்லாம் அதன் மீது இடறி விழுந்தார்கள். இப்படிஒருமாதம் ஆயிற்று. பின்னர் அதை வாசலில் தூக்கிப்போட்டார்கள்.

''எல்லோரும் பொருள்களை இப்படி வெளியே எறிந்தால் அவை தீப்பற்றிக்கொண்டால், நாங்கள் என்ன செய்வது?'' என்று கட்டிட நிர்வாகி கோபித்துக்கொண்டார்.

''அதை நாங்கள் எங்கே போடுவது?'' என்றார் பையனின் அப்பா.

''எங்கேயாவது போடுங்கள்; முற்றத்தில் வீசிவிடாதீர்கள்'' என்றார் நிர்வாகி.

வேண்டாத யாழால் அந்தப் பெற்றோருக்குத் தொல்லை வந்தது.

கந்தைகள், சீசாக்கள், சாக்குகள் வாங்குவோன், அந்த யாழைச் சீந்தவில்லை. மலிவுப்பொருள் கடையினும், அதை வாங்கவில்லை. ஏதாவது வீட்டு வாசலில் போட்டுவிடலாம் என்றால், அங்குள்ள வாயில் காப்போன் மிக விழிப்புடன் இருந்தான்.

கடைசியாக அந்தப்பையனின் அப்பா, அதை ஓர் இசைப்பள்ளிக்குத் தூக்கிச் சென்றார்; அதன் கதவருகே அதை வைத்தார்; மின்சார மணியை அழுத்தினார்; பின்னர் ஓர் பாய்ச்சலாக

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சாகித்திய அகாடமியினர் முதன் முறையாக இம்முறை பரதநாட்டிய ஆசிரியர் ஒருவருக்கு தேசிய விருது அளித்துக் கௌரவித்துள்ளனர். ஈழத்துடன் நெருங்கிய தொடர்புள்ள நமது நாட்டிய கலாகேசரி வழுவூர் இராமையா பிள்ளைக்குத்தான் இந்த விருது கிடைத்திருக்கிறது. 'வழுவூரார்' என்று செல்லமாக அழைக்கப்படும் இவரிடம் பரத நடனம் பயின்ற ஈழத்து மாணவிகளில் குமாரி திரிபுரசுந்தரி நமக்கு நன்கு அறிமுகமானவர். இதோ, இவரிடம் நடனம் பயின்ற நம்மவர் திருமதி கார்த்திகா கணேஷ் நாளை டில்லி ஜனாதிபதி இல்லத்தில் நடக்கவிருக்கும் பரிசளிப்பு விழாவில் பரதநாட்டியமாடுகிறார். இச்சந்தர்ப்பத்தில் ஆடற் கலை பற்றி வழுவூராரின் கருத்துக்களை இங்கு வெளியிடுகிறோம்.

# ஆடற் கலை

— வழுவூர் இராமையாபிள்ளை —

நம் தமிழ் நாடு மிகப் பழைய காலம் முதலே ஆடற் கலையில் பெரும் சிறப்பு வாய்ந்திருந்தது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

சிவபெருமான் தில்லையில் ஆடிய கூத்தைத் தேவாரம் பல இடங்களில் போற்றுகிறது.

''நட்டங்களாடும்
பரமனார்''
''சொக்கம் பயின்றீர்''
''குடமுடிவச் சதி வழியே
அனல் கையேந்திக்
கூத்தாட வல்ல
குழகனுரை''

கண்ணன் ஆடிய குடக் கூத்தையும் குரவைக் கூத்தையும் ஆழ்வார்கள் சிறப்பாகப் பாடியுள்ளார்கள்.

சிலப்பதிகாரத்தில், அரங்கேற்று காதையின் அடியார்க்கு நல்லார் உரையும், பண்டைத் தமிழகத்தில் ஆடற்கலை பெற்றிருந்த சிறப்பை நன்கு விளக்குகின்றது. மாதவியின் நாட்டியம் அரங்கேறியபோது, ''நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து'' ஆடியதாகக் கூறப்படுகிறது இது இளங்கோவடிகளால் குறிப்பிடப்படுகின்றது இன்னும் ஆடலாசிரியன் அமைதி கூறுங்கால், ''இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து'' என்றும் சாற்றுகின்றார். இதனை விளக்கும் அடியார்க்கு நல்லார் இருவகைக் கூத்து 'சாந்தியும் விநோதமும்' என்று கூறி அவற்றின் உட்பிரிவுகளைக் கொடுத்துள்ளார்.

''சாந்திக் கூத்தும்
விநோதக் கூத்து
மென்று
ஆய்ந்துற வகுத்தனன்
அகத்தியன்தானே''

''சாந்திக் கூத்தே
தலைவன் இன்பம்
ஏத்தின் றுடிய சமநிலை
நடமவை
சொக்க மெய்யே
அபிநயம் நாடகம்
என்றிப்பாற்படுஉ
மென்பனுர் புலவர்''

சாந்திக் கூத்தின் உட்பிரிவுகள்:— சொக்கம் என்றது, சுத்த நிருத்தமாகும். இது 108 கரணமுடையது. மெய்க் கூத்தாவது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். அபிநயக் கூத்தாவது கதை தழுவாது, பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி, வல்லபம் செய்யும் பலவகைக் கூத்து.

விநோதக் கூத்தின் உட்பிரிவுகள்:— குரவை என்பது காமமும், வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும். எண்மரேனும், ஒவ்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது. கலிநடம் என்றது கழாய்க் கூத்து. குடக்கூத்து என்பது பதினோராடலில் ஒன்று. சரணமானது படிந்தாடல். நோக்கென்பது, பாவமும், நுண்மையும், மாயமும் முதலியவற்றை உடையது. தோற்பாவை என்பது தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பது ஆகும்.

நம் தமிழ் நாட்டில் மூவேந்தர் ஆட்சிக்கு முன்னிருந்தே கீதம், வாத்தியம், நிருத்தம் என்று சொல்லப்பட்டதும்; தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி இவற்றைத் தோற்றுவித்து வளர்த்துவிட்டதும் பண், பாடல், ஆடல், சித்திரம், சிற்பம் எல்லாம் ஒருங்கே அமைந்தது ஆடற்கலையாகிய நமது பழம்பெரும் பரத நாட்டியக் கலையாகும்.

ஆடலாசிரியர்

இத்தகு சிறப்புவாய்ந்த இப் பழம் பெரும் ஆடற்கலையைத் தொன்று தொட்டுப் பல்லாயிர வருடங்களாகத் திறமை வாய்ந்த ஆடல் ஆசிரிய மரபினோர்கள், தம் மாணவ மாணவியர்க்குப் பயிற்றுவித்து வந்தார்கள். பழைய ஏடுகளிலும், கல்வெட்டுகளிலும் கண்ட சாந்திக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, சாக்கைக் கூத்து முதலியவற்றை அவர்கள் மரபு கெடாமல் போற்றி வந்தார்கள். ஒவ்வோர் அசைவிலும், நடையிலும், தூக்கலிலும், நிலையிலும், முகத்தோற்றத்திலும் அக்கலையின் தெய்வீகத் தன்மையை மக்களுக்கு நன்கு விளங்குமாறு செய்து வந்திருக்கிறார்கள். இவ்வாறு சிறந்த முறையில் நாட்டியக் கலைக்கு அரும்பணியாற்றி வந்த தேர்ந்த ஆடலாசிரியர்களுக்கு மூவேந்தர்கள் ஆட்சியில், ''நட்டுவ திலை'', 'நட்டுவக் காணி', 'கூத்துக்காணி' போன்ற சர்வமானியங்களும், 'நிருத்தப் பேரரையன்', 'சாக்கை மாராயன்' போன்ற பட்டங்களும் வழங்கிச் சிறப்பித்து இருக்கிறார்கள்.




பழங்காலம் தொட்டு பரதக் கலையைச் சம்பிரதாயத்தோடுதான் செய்து வந்திருக்கிறார்கள். அதன் வரலாற்றைப் பண்டைய மரபு, இடைக்கால மரபு, தற்காலமரபு என்ற மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காணலாம்.

பண்டையமரபு

நாட்டியம் ஆரம்பிப்பதற்கு முன்னால் மேளப் பிராப்தி ஜதிகள் சொல்லி ''தோடய மங்களம்'' என்னும் கடவுள் வாழ்த்துப்பாடி, புஷ்பாஞ்சலி என்னும் நடனம் முதலில் ஆடத் தொடங்கி, முறையே ஜதி நாட்டியம், சப்தவாசியம், சுவத்துவ நாட்டியம் முதலிய நிருத்த நிருத்தியங்களும், தேவாரம், திருவாசகம், திருத்தாண்டகம், திருவெம்பாவை பாசுரம், தரு முதலியவற்றிற்கு அபிநயங்கள் செய்வதாகும். இது சுமார் 250 வருடங்களுக்கு முந்தின சம்பிரதாயம் எனப் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்போது, மத்தளமும், பாழங் குழலும் ஆகிய இசைக் கருவிகளாகப் பயன்படுத்திவிடுகிறார்கள்.

இடைக்கால மரபு

நாட்டியம் ஆரம்பிப்பதற்கு முன்னால், மேளப் பிராப்தி ஜதிகள் சொல்லி தோடமங்கள மகாடி. புஷ்பாஞ்சலியை அனுசரித்து கற்பித்த அலாரிப்பும் ஜதி நாட்டியத்தை அனுசரித்துத் தோன்றிய ஜதீஸ்வரமும், சப்த வாசியத்திலிருந்து ஆன்றோர் கற்பனை செய்த சப்தம், வர்ணம், பதங்கள், தில்லானா, விருத்தம், கர்ணு விருத சுலோகம் முதலியன செய்வதாகும். இதற்கு இசைக் கருவிகளாகிய மத்தளமும், முகவீணை, பிடில், புல்லாங்குழல், சுருதி துருத்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

தற்காலமரபு


தோடைய மங்களம் பாடி, அலாரிப்பு, ஜதிசுரம், சப்தம் ஆனதும் நடராஜத் தோத்திரமாக உள்ள ஒரு பாடலுக்கு ஆடி அபிநயிப்பதும் பின் வர்ணம் அல்லது வர்ணத்துக்குச் சரியான இசை, லய அமைப்புள்ள பக்திபூர்வமான கருத்துக்கள் உள்ள பாடலுக்கு ஆடி அபிநயிப்பதும்பிறகு விருத்தம், மத்தியகாலத்தில்லையான நல்லகருத்துள்ள பதங்கள், தேசிய சம்பந்தமான பாடல், தில்லானா, சுலோகம், கோபால கிருஷ்ண பாரதியார் இயற்றிய 'நடனமாடினார்' போன்ற பாடல், பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் சூசிகள், லலாடதிலகம், அரிகளம் முதலிய கரணங்களைச் செய்யும்வகையில் பாம்பாட்டிச்சித்தர் பாடலுக்கு அமைக்கப்பெற்ற நாக நிருத்தியன் என்னும் நாட்டியம் மற்றும் குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக்குறவஞ்சி, உஷா பரிணயம், பாமா கலாபம் முதலிய நாட்டிய நாடகங்களில் உள்ள ஒரு சில நிகழ்ச்சிகளையும் ஆடி அபிநயிப்பதுதற்கால மரபாக இருக்கிறது. தற்காலம் சிலர் தோடய மங்களம் பாடாமல் நேராக வந்து ஒரு பாடலைப்பாடி நாட்டியம் ஆரம்பிப்பதும் ஒருசிலர் ஒன்றுமே பாடாமலும் அலாரிப்பை ஆரம்பிக்கிறார்கள். இது அவ்வளவு சரியன்று பரதநாட்டிய நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தோடைய மங்களம் பாடித்துவங்குவது என்ற சம்பிரதாயத்தின் கருத்து நமது தெய்வீக ஆடற்கலையை ஆடுவோரும் ஆடுவிப்போரும் பார்ப்பவர்களும் சர்வ மங்களத்தையும் அடைவார்கள் என்று சுவாமி நந்திகேசுவரர்க்கும் கூறியதை விளக்குவதற்காகவே ஆன்றோர்களால் அமைக்கப்பட்டு இருக்கிறது.

தற்காலம்மத்தளம், புல்லாங்குழல், வயலின், பிடில், வீணை ஆகிய இசைக்கருவிகளைத் துணைக் கருவிகளாகப் பயன்படுத்துகிறார்கள்.

பல்கலை இணைந்தது பரதம்

பரத நாட்டிய உடையோடு 2,000 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட அநேக நாட்டிய நிலைகள், நமது தென்னாட்டுக் கோயில்களில் உள்ளன. இதிலிருந்து ஆராய்ச்சியின் மூலம் பழைய சம்பிரதாயத்தைப் புதுப்பித்துக்கொண்டு வரும்போது, அது புதிதாகத் தோன்றுகிறதே தவிர அது புதுமையன்று. பழம்பெரும் சம்பிரதாயம் என்பது அறிஞர்கள் அறிவார்கள். என்றென்றும் பொலிவோடு வசீகரமாயும் தோன்றக்கூடிய சிரஞ்சீவிக் கலை பரதக் கலையாகும். இத்தகைய அரும்பெரும் கலையின் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொள்வது அவசியமாகும். பரத நாட்டியம், பல்கலைகளையும் ஒருங்கேசேர்த்துக்கொண்டிருக்கும் பழம்பெரும் கலையாகும். சித்திரம், கவிதை, சங்கீதம், பக்தி, ஆத்ம தத்துவம், ஆத்மீக சக்தி, ஆக்கல், அழித்தல் முதலிய பல அம்சங்கள் இக்கலையினுள் அடங்கியிருக்கின்றன. பரத நாட்டியக்கலை, அரியதோர் சமிக்ஞைக் கலையாகும். பொருள்களையும், கருத்துக்களையும், உள்ள எழுச்சிகளையும் விளக்குவதற்கு அதில் பல அம்சங்கள் இருக்கின்றன. சிக்கலான இலக்கண இலக்கியங்களை எடுத்துக்காட்டி ஆடும் போது கிரமம் காட்டாது, அடக்கமாயும் அநாயசமாயும் லாவகமாகவும் கலையின் பெருமையை விளங்கச்செய்ய வேண்டும்.

# "பெண்ணே நீ வாழ்க"



இந்தப் பெண்ணைப் பார்த்ததும் இப்படி வாழ்த்தத் தோன்றுகிறதா? கே. ஆர். விஜயாவைப் பார்த்ததும் யார் தான் வாழ்த்தமாட்டார்கள்? இலங்கையில் புதிதாக ஆரம்பித்திருக்கும் எஸ். ரி. ஆர். பிலிம்ஸாரின் முதல் வெளியீடாக திரையிடப்படவிருக்கும் "பெண்ணே நீ வாழ்க" என்ற படத்தை நீங்களும் பார்த்து வாழ்த்துவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தம் பிறக்குமோ அல்லது ஆலம் பிறக்குமோ என்பதே வெளிச்சமில்லாத சங்கதி இது.

காரியங்களை எவ்வளவு தான் சரியாகச் செய்துவிட்டபோதிலும் அது திருப்திகரமாக அமைந்துவிட்டதென்று எவருமே சொல்லிவிடுவதில்லை...

"கிழக்கு" - கிழங்காகவும், "மடக்கு" முடக்காகவும் ஆகும் இந்த எழுத்துக்கள் கண்ணுக்கு எப்படி செப்படி வித்தை காட்டுகின்றனவோ? வெட்கங்கெட்ட பிழைப்பு இது."

அதிபர் உருத்திரமூர்த்தியாகி என் முன்னே வந்துவிட்டார். "என்ன ஐயா? உம்மால் எங்களது பத்திரிகையின் மானம் கப்பலேறுகின்றது" என்று எரிந்து விழுந்தார்.

"சே!" என்ன பிழைப்பு என்றே கடந்த இரண்டு நாட்களாக சிந்தித்துச் சிந்தித்து விடைகாண முடியாது தவித்துக்கொண்டிருந்தேன்—

இந்தவேலையை விட்டொழித்துவிட்டால் மானம் என்ற அந்த ஒன்றுடன் உலகத்தில் தலைநிமிர்ந்து விடலாம் என்பதுதான் தீர்மானம். இந்த அடிப்படை நினைவுடன் பின்னேரம், வீட்டுக்கு நடைப்பிணமாக நடந்துவந்து ஈசிச்சேரில் சரிந்து படுத்திருந்தேன். சகதர்மிணி என்முன்னே வந்துவிட்டாள்...

## சிறுகதை [5-ம் பக்கத் தொடர்ச்சி]

"என்ன உங்களுக்கு அட்வான்ஸ் கிடைத்துவிட்டதா? இரண்டு நாட்களாக பிள்ளைக்கு மாவில்லை" என்று அவள் ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

உள்ளத்தில் கொதித்த ஆத்திரத்தில் அவளை அடித்துவிட்டபின் அவள்மீது அனுதாபப்பட்டேன். இதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

கட்டிலில் சரிந்துகிடந்த போது... மீண்டும் காரியாலயத்து நினைவுகள் என்னைச் சூழ்ந்து நிற்கின்றன.

அதிபர் தனிமையில் கூப்பிட்டுத்திட்டினர் பரவாயில்லை. காரியாலயத்திலுள்ள அத்தனை பேர் மத்தியிலும் அல்லவா என் திறமைக் குறைவைக் குத்திக்காட்டிப் பேசினர்.

சே. வாழ்வு வயிற்றுக்கு மட்டுமல்ல. நம்மவர் கட்டிக்காத்த மானத்துக்காக என்ற உண்மை ஓங்கி என் மனதில் உறுமியது.

பேனாவை எடுத்து மன உத்வேகத்தை அப்படியே பாய்ச்சி இந்தக் கடிதத்தை எழுதினேன்:

"அதிபர் அவர்களுக்கு,

ஐயா,

தங்கள் ஆத்திரக் கணைகளால் என் மானம் அடிபட்டுவிட்டது. இனியும் அதனை இழந்து தங்களுடைய காரியாலயத்தில் பணிபுரிய யான் தயாராகவில்லை. இந்த உலகம் மிகமிகப் பரந்தது. இதில் எத்தனையோ விதமனிதர்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் யானும் ஒருவன். மானமே எனக்குப் பெரிது! எனவே இந்த இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்டு என்னை விடுதலை செய்யவும்."

இப்படிக்கு,
ரகுநாதன்.

ஃ ஃ ஃ

இந்தக் கடிதம் இப்போதும் என் சட்டைப் பைக்குள்ளிருக்கிறது. அதனை எடுத்துக்கொண்டேன். அச்சக 'போமன்' இரண்டு ஆட்களைவிட்டு எனது மேசைமீது கிடக்கும் "புறூவ்"களைத் திருத்தித்தரும்படி கேட்டிருந்தார். நான் இனி யாருக்குப் பயப்பட வேண்டும்? இராஜினாமாக் கடிதத்தை விட்டெறிந்துவிட்டுப் போகின்ற எனக்குக் கடமையைப்பற்றி என்ன அக்கறை?

மேற்குப் பக்கத்திலே குதிய சூரியன் உடைந்து கிடக்கும் முகட்டின் வழியாகப் பாய்ந்து உச்சியில் குத்த ஆரம்பிக்கிறான்.

அதிபரின் அறை எனது இடத்துக்கு ஏறக்குறைய இருநூறடி தூரம் வரை இருக்கலாம்....

இரண்டொரு அடி நகர்ந்து அவரது இருக்கையை நோக்கி நடக்கின்றேன்.

அண்ணை!

இப்படி ஒரு குரல். திரும்புகிறேன். எங்கவீட்டுக்கு அடுத்த வீட்டுப் பையன் நிற்கிறான்.

"என்ன தம்பி?"

"உங்கட பிள்ளைக்குச் சுகமில்லையாம். டாக்குத்தருக்குக் கொடுக்கப் பத்து ரூபாவும் கொண்டுவரட்டாம்..."

நான் அசந்து விட்டேன். பத்துருபா...... யாரிடம் பெறுவது—

இராஜினாமாக் கடிதத்தைக் கொடுப்பதா?

கடமையைமுடித்தபையன் போய்விட்டான். கால்கள் நிலைகுத்தி நிற்கின்றன.

உலகமே ஒருபோலி மயக்கிலே தான் சுழலுகிறது. இந்த மயக்கத்திலே மனிதர்கள் ஒவ்வொருவரும் தான் வாழ முயல்கிறார்கள்.

அந்த மயக்கத்துக் காட்டவேண்டியவன் நானே. கையிலிருந்த இராஜினாமாக் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து விடுகிறேன்.

வெளியே பாய்ந்த கடதாசித் துண்டங்களிற் சில என் முகத்தில் அறைவது போல் காற்றில் திரும்பி என்னையே தாக்குகின்றன.

அதிபரின் அறையை நோக்கி நகருகிறேன்.

என் குழந்தையை டாக்டரிடம் காட்டவேண்டுமானால் எவ்விதமும் பத்து ரூபா உடனே தேவை. அதைப் பெறுவதற்கு அவரைத்தவிர வேறு வழியே இல்லை..

அமைதியும் சந்துஷ்டியும் தவழும் அந்த முகத்திலா மூன்றும் நாள் அத்தனை கோபம் பொங்கித் ததும்பியது. ஆச்சரியமான தோற்றமிது.

விஷயத்தை கீழ் ஸ்தாயில் விளக்கிய எனக்கு சில நொடிக்குள் பத்து ருபா கிடைத்து விடுகிறது.


மனக்கால் நாழிநான் கட்டிக்கோட்டை அழிந்தொழிய..

வெளியே இறங்கி நடக்கிறேன் வீதியில் ஒவ்வொரு மனிதனும் எதற்கெதற்கோ ஓடுகிறான். நானும் எனக்காக அவர்களுடன் ஓடுகிறேன்...


## வான விபத்து

1973-ம் வருடத்தில் விமான விபத்துக்கள் குறையுமெனினும் அவற்றால் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கும் என்று பிரிட்டனின் வான் பதிவுக் கழகத் தலைவரான மாக்டர்லைட தெரிவித்துள்ளார். இன்று ஆண்டுதோறும் சராசரியாக 25 பிரயாண விமானங்கள் மோதி உடைகின்றன. அவற்றால் சுமார் 700 பேர் இறக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போர்ட் சேட்
○ ரீ சேட்
○ செறி சேட்
○ செறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330



ST. ANTHONY'S HARDWARE STORES LTD
345, SKINNERS ROAD SOUTH, COLOMBO 10.
சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.



ஆட்டமும் பாட்டமும் நிறைந்தவள்
உங்கள் குழந்தைக்கு ஆரோக்கியம், வலிமை, மகிழ்ச்சி நீங்களும் கொடுக்கலாம்.
ஒரு குழந்தையின் உடல் உற்சாகமாக வளர்வதற்கும், கண்பார்வை தெளிவாக இருப்பதற்கும் வேண்டியது வைட்டமின் 'ஏ'. பலமுள்ள எலும்புகளுக்கும், உறுதியான பற்களுக்கும் வேண்டியது வைட்டமின் 'டி'. வைரமான சதைக்கும், களங்கமற்ற சருமத்துக்கும் வேண்டியது வைட்டமின் 'ஸி'. உங்கள் குழந்தைகளுக்கு இந்த வைட்டமின்கள் கிடைப்பதற்கு நிச்சயமான வழி யொன்றுண்டு. அதாவது, அவர்கள் தினமும் "ஹலிபொறேஞ்" அருந்த வேண்டும்.
உண்மையில், வாழ்நாள் முழுவதும் சலதோஷம், தொற்று நோய்கள் வராதபடி எதிர்க்கும் சக்தியை உடம்புக்கு அளிப்பவை 'ஹலிபொறேஞ்' சில் அடங்கியுள்ள மூன்று பாதுகாப்பு வைட்டமின்களே

ஹலிபோரேஞ்
...வளர்ச்சிக்கும், உறுதியான விருத்திக்கும்
இது கிளாஸ்கோ-அலன்பறீஸ் (சிலோன்) லிமிட்டெட்டின் தயாரிப்பு.
367/67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### பாலர் வகுப்பு ஆரம்பம்

வேலணை அரசினர் மத்தியகல்லூரிக்கு அருகாமையிலுள்ள "அம்பிகா" இல்லத்தில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை 14-1-67 சனிக்கிழமை பாலர் வகுப்பு நடைபெறும். இவ்வகுப்பில் சேர விரும்புவோர் (ஜனவரி) தைமாதம் 10-1-67-ந் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

காரியதரிசி,
வேலணை மேற்கு மாதர் சங்கம்,
வேலணை.

2166

---

[illegible]
கெல்லியடி
போயாதினமும் முதல் நாளும் காலை 10 மணி மெட்னி
முத்துராமன் — விஜயா நடித்த
நாணல்
பி. ப. 4-00 மட்டும்
THE SPARTAN-GLADIATORS

---

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 3 காட்சிகள்
THE GUNS of NAVARONE
(cinemascope color)

---

[illegible]
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை காட்சிகளில் 2-30 மணி
கோவிந்தன் — ஜானகி நடித்த
ஆயிரம் தலைவாங்கி
அபூர்வ சிந்தாமணி

---

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ராமராவ் - அஞ்சலிதேவி நடித்த
லவகுச
(கலர்)

---

REGAL—JAFFNA
NOW SHOWING
CLINT WALKER
JAY NORTH
in
MAYA

---

### வீரத்துக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் ஏற்கனவே அமுலில் இருந்ததிலும் பார்க்க சோலைவரிக்கு இரண்டரை வீதம் கூட்டி 15 வீதமாகவும், குழாய்நீர் விநியோகவரிக்கு நாலரைவீதம் கூட்டி 19 வீதமாகவும் யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர்கள் தயாரித்த புதிய வரவுசெலவுத்திட்டத்திலிருந்து உயர்த்தப்பட்ட இருவரிகளையும் உடனடியாக ரத்துச்செய்ய உத்தரவு பிறப்பித்தமைக்கு யாழ்ப்பாண மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாக யாழ்ப்பாண உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்துக்கு யாழ்ப்பாண முன்னாள் மேயர்களில் ஒருவரான வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ந. நி.)

### விசேஷ பூஜை

நாவலப்பிட்டி, செவ்.

நாவலப்பிட்டி வேலுவனுருமையில் இன்று தேசிய வீரர்கள் ஞாயவாரித்தம், போயா விடுமுறை ஓராண்டு பூர்த்தி வைபவம் ஆகியவற்றைக் கொண்டாடு முகமாக விசேஷ பூஜைகள் இடம்பெறும்.

மேற்படி பௌத்த தேவாலயத்தின் உடைந்த பெருமதில் கட்டும் பிரமதான பணிக்கு நாவலப்பிட்டி மாவட்ட காரியாதிகாரி தலைமை தாங்குவார்.

---

வெற்றிகரமான 4-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 2-30, மாலை 6-30, 9-30 | விஜேந்திரா (அநுராதபுரம்)

முத்துராமன் – கே. ஆர். விஜயா
ஜெய்சங்கர், சுந்தரராஜன், (இருவேடங்களில்)
எல்: விஜயலக்ஷ்மி
நடிக்கும்
பஞ்சவர்ணக்கிளி
இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
டைரக்ஷன்: கே. சங்கர்

---

# உலக மேடை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் கொடுத்துள்ள ஜனாதிபதி ஜோன்சன் பாதுகாப்பு இரகசியசேவை அதிகாரிகள் தம்மை உடனடியாக ஜனாதிபதி மாளிகை விமானத்தில் (விமானப்படை விமானம் இலக்கம் ஒன்றில்) டல்லாசை விட்டு வெளியேறிச்செல்லுமாறு கேட்டுக்கொண்டனராம். திருமதி கென்னடி விமானப் படை (இலக்கம் இரண்டு) விமானத்தில் தமது கணவனின் உடலத்துடன் தனிமையில் பிரயாணம் செய்வதைத் தவிர்த்து தம்முடன் ஒரே விமானத்தில்வர விரும்பமாட்டார் என்று திருமதி கென்னடியை திரு. ஜோன்சன் கேட்டதாகவும் இதற்கு அவர் ஒப்புக்கொண்டதாகவும் ஜோன்சன் விளக்கம் கூறியிருக்கிறார்.

திரு. கென்னடியின் மரணத்தின்பின் திரு ஜோன்சன் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம்செய்ய அவதிப்பட்டதாக மான்செஸ்டர் தமது நூலில் எழுதியிருப்பதையும் திரு ஜோன்சன் மறுத்து, அட்டர்னி ஜெனரல் ஆலோசனையின்மீதே தாம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டதாகக் கூறியிருக்கிறார்.

திரு கென்னடி மரணமடைந்ததன்பின் கென்னடியின் மறைவுக்காக இரங்கியவர்களைவிட திருமதி ஜாக்குலின் கென்னடிக்காக இரக்கம் கொண்டவர்களே அதிகம். இன்னும் திருமதி கென்னடி உலக மக்களின் அனுதாபத்துக்குரியவராக இருக்கிறார். "ஒரு ஜனாதிபதியின் மரணம்" பற்றிய நூல், உருவாகி வெளிவருமுன்னரே பெரும் சர்ச்சையை மட்டும் கிளப்பவில்லை. திருமதி கென்னடியின்மீதுள்ள அனுதாபத்துக்கும் சரிசையை உண்டாக்கியிருக்கிறது. திருமதி கென்னடி இப்பொழுது அணியும் ஆடைபற்றியும், அது முழந்தாளுக்குமேல் உயர்ந்து வரும் புதிய மோஸ்தராக இருக்கிறதென்றும், திருமதி கென்னடி இப்பொழுது நகைச்சுவையாகப் பேசக்கூடியவர்களுடனும் பேசக்கூடிய இடங்களிலுமே காணப்படுகிறாரென்றும்கூட அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கியுள்ளன.

### கென்னடியின்பெயரில் வியாபாரம்

திரு. ஜோன் எப். கென்னடியின் கொலைபற்றிய விசாரணை செய்வதற்காக அரசாங்கம் நியமித்த வாரன்கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையின் பிரதிகள் பத்தாயிரத்துக்கும் குறைவாகவே விற்பனையாயின. ஆனால் அந்த அறிக்கைபற்றிக் கண்டனம் தெரிவித்து எழுதப்பட்ட அறிக்கைகளும் புத்தகங்களும் இலட்சக்கணக்கில் விற்பனையாகியுள்ளன.

"ஒரு ஜனாதிபதியின் மரணம்" பற்றி மான்செஸ்டர் எழுதிய நூல் இன்னும் வெளிவரவில்லை. அதை வெளியிடாது தடுத்துவைக்க கென்னடி குடும்ப வழக்கறிஞர்கள் நியூயோர்க் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த அதேசமயத்தில், சிக்காகோவில் 'லுக்' (பார்) என்ற சஞ்சிகையில் தொடர்ச்சியாக அந்த நூலைப்பகுதிபகுதியாகப் பிரசுரிக்க உரிமை வாங்கியவர்கள் முதல்பகுதியுள்ள சஞ்சிகையை ஐந்துலட்சத்துக்கு மதிகமாக அடித்து உருவாக்கிக்கொண்டிருந்தனராம். 'லுக்' சஞ்சிகையில் "ஒரு ஜனாதிபதியின் மரணம்" [illegible] வெளியிடுவதற்கு அந்த [illegible] மாஞ்[illegible]

செஸ்டருக்கு 6,65,000 டாலர் கொடுத்திருக்கின்றனர்.

இந்தத் தொடர் தங்கள் சஞ்சிகையில் வெளிவருமென விளம்பரம் செய்ததன் மூலம் வர்த்தக விளம்பரங்களைப் பெருக்கி லாபம் அடைவதோடு, அந்தக்கட்டுரையைத் தொடராகவெளியிடுவதற்கு லண்டன் டைம்ஸ், பிரான்ஸின் 'மாட்ச்', இத்தாலியின் 'இபோக்கா' ஆகிய பத்திரிகைகளுக்கு உரிமைகளை விற்பனை செய்ததன் மூலம் மேலும் பெருந்தொகைப்பணத்தைச் சம்பாதித்துள்ளது.

சஞ்சிகைகளில் கட்டுரைத்தொடராகவே வெளிவருவதும் "ஒரு ஜனாதிபதியின் மரணம்" நூலாக வெளிவருவதும் நீதிமன்றத்தினால் இப்போது தடுத்து வைக்கப்படலாம். ஆனால் எப்போதுமே தடுத்து வைக்கப்படுமா?

### போக்குவரத்து அதிகாரிக்கு மகஜர்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரியிலிருந்து காலையில் மாணவர்களின் பிரயாணத்திற்காக தனங்கிளப்புச் சந்திவரை வந்து திரும்பும் தடுகதி பஸ் சேவையை நாவற்குழிச் சந்திவரை சென்று திரும்பக் கூடியதாக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளும் மகஜரை கறைவன்புலம், கைதடி நாவற்குழி, தச்சன்தோப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து அதிகாரிக்கு அனுப்பியுள்ளனர். அம்மகஜரில் இவ்வித சேவை சாவகச்சேரிக்குச் செல்லும் மாணவர்களுக்கு மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலும் மாணவர்களும் பிரயாணம் செய்ய வசதியாய் இருக்குமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### கத்திக் குத்தில் பலத்த காயம்

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாயைச் சேர்ந்த குத்து துரைராசா என்பவர் பலமான கத்திக் குத்துக் காயங்களுடன் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஊர் கவற்றுறையில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக காயங்களுக்குள்ளான துரைராசா பொலிஸாருக்குத் தெரிவித்துள்ள முறைப்பாட்டில் ஊர்காவற்றுறை மேற்கிலுள்ள கூட்டுறவுப் பண்டசாலை முன்றில் முன்னால் வைத்து வைரமுத்து இராஜரத்தினம் என்ற நபர் தனது முதுகில் குத்தியதாகத் தெரிவித்துள்ளார். சந்தேக நபரைப் பொலிஸார் தேடுகின்றனர். (ந. நி.)

---

நலக்குறிச்சல்
தோல்சம்பந்தமான
சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.
சச்சிதானந்தா
வைத்தியசாலை
மித்திரன் அம்பாள் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி P. O.

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**கோழிகள்:**
கூவும் சேவல்- பெருமேடு, பறக்கும் குஞ்சுகள் பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலை நிதானம். அருணா ஏஜென்ஸிஸ், அளவெட்டி. 2218

**கோழிக்குஞ்சுகள்:**
இனம் பிரியாத ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலைசதம் எழுபத்தைந்து (75) அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி. 2307

**காணியும் வீடும்:**
நல்லூரில் 3 பரப்புக்காணி வீட்டோடுவிற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: லைப்பிரகாசம் நாகலிங்கம், 34/5 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 2301

**முந்திரிகைக் கன்றுகள்:**
ஒரு வருடத்தில் பலன் தரும் நல்ல இனதிராக்ஷைக் கன்றுகள் விற்பனைக்குண்டு. விலை ரூபா 1/ விபரங்களுக்கு: N. கனகரத்தினம், ஓட்டகப்புலம், வசாவிளான். 2219

### வைத்தியம்

**தொய்வு, காசம், நீரிழிவு,**
ரேந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்தும் விபரங்கள் அடங்கிய கந்த மேலை இலவசம். பத்திரிகையாசிரியர், பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் கர்பூர ஞானதேவ J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

**வகுப்புகள்**
ஆங்கிலம்/தமிழ், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல், வர்த்தகம் முதலிய வகுப்புகள் முக்கூறாக நடைபெறுகின்றன. வர்த்தக பத்திரப் பரீட்சை வகுப்புகள் விசேஷமானவை. விடுதி வசதி உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 2214

**வகுப்புகள்**
ஜீ. சி. ஈ. உயர்தரம், சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், சிங்களம் ஆகிய காலை/மாலை வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்/நெல்லியடி, கரவெட்டி, 2094

**வகுப்புகள்:**
யாழ் கல்லூரி, 4-ம் திகதி வகுப்புகள் மீண்டும் ஆரம்பம். புதிய மாணவ மாணவிகள் உடன் சேரலாம். 426, ஆஸ்பத்திரி ரோட்; பெண்கள் கிளை: 29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 2220

### தேவை

**பாமசிஸ்ட்**
தராதரமுள்ள பாமசிஸ்ட் (Pharmacist) தேவை. நற்சாட்சிப்பத்திரக்கூடிய இருவருடைய பெயர்களையும் உங்கள் வேலை நிபந்தனைகளையும் தருக. விளம்பர இலக்கம் 2217, மே/பா "ஈழநாடு", யாழ்ப்பாணம் என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 2217

### காணவில்லை

**கூப்பன்கள்:**
P 661099, P 661100, P 661101, P 661102, C 767836-ம் இலக்கக் கூப்பன்களைக் காணவில்லை. கண்டெடுத்தவர் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2218

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

